# DEPOSITION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 52/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW-1/Lw-1 |
| Name | : | Mr. Vigeshwaran |
| Father Name | : | Vedhakrishnan |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்தில் வசித்து வந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். 29.10.2021 வேலை விஷயமாக திருப்பூர் வந்தேன். அந்த சமயத்தில் எனக்கு வேலை தேடி பார்த்து வேலை கிடைக்கவில்லை. இரண்டாம் தேதி காலை ஊருக்கு கிளம்பி செல்லலாம் என்று திருப்பூர் ரயில்வே நிலையத்திற்கு சென்றேன். அதிகாலை 4 மணிக்கு அவசர நிமித்தமாக பாத்ரூம் சென்றபோது ரயில்வே மேம்பாலத்திற்கு கீழே சென்றேன். அந்த சமயத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள். அதில் வந்த ஒருவர் 22 வயது உடைய ஆடவர் மற்றொருவர் 17 வயது உடைய பெண். அவர்கள் இருவரும் என்னிடம் என்னைப் பற்றி விசாரித்தார்கள்.

2. நான் அவர்களிடம் என்னுடைய விபரங்களை சொன்ன போது என்னுடைய போனை கேட்டார்கள். நான் போனை அவர்களிடம் கொடுத்தேன். முதலில் அவர்கள் போனை என்னிடம் இருந்து கேட்டபோது நான் கொடுக்கவில்லை மறுத்தேன். அவர்களே போனை என்னிடம் இருந்து பிடுங்கிக் கொண்டு 22 வயது உடைய நபர் பாக்கெட்டில் கத்தி வைத்திருந்தார். அதை வைத்து என்னை மிரட்டினார். போன் வேண்டுமா அல்லது ஆசை உள்ளதா என்று கேட்டார். போன் வேண்டும் என்று திரும்பப் போனேன்.

3. அந்த சமயத்தில் போனை திரும்பத் திரும்ப கேட்டதால் 22 வயது உடைய நபர் என் கன்னத்தில் அறைந்தார் தடுமாறி நான் கீழே விழுந்த போது ரயில்வே பாதையில் விழுந்து விட்டேன். அதனால் எனக்கு மூக்கில்,வாயிலும், நாக்கிலும், பல் ஆகியவற்றில் அடிபட்டது. ரத்தப் போக்கு அதிகமாக இருந்தது. அதை பார்த்தவுடன் அவர்கள் இருவரும் சென்று விட்டார்கள். உடனே நான் காவல் அதிகாரிகளிடம் இதைப் பற்றி சொல்ல சென்றேன். பாலத்திற்கு அருகிலே ரயில்வே போலீஸ் நிலையம் இருந்தது. அதற்கு அருகில் பார்சல் ஆபீஸ் உள்ளது. அந்தக் காவல் நிலையம் பழைய காவல் நிலையம் என்று சொன்னார்கள் பார்சல் ஆபீசில் இருந்த நபர்கள் ஆம்புலன்ஸ் இருக்கு தகவல் கொடுத்தார்கள்.

4. அதன் பிறகு திருப்பூர் அரசு மருத்துவமனையில் காலை 7 மணிக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். சம்பவத்தைப் பற்றி என் வீட்டிற்கு தகவல் கொடுத்தேன். தகவல் ஆம்பூலன்ஸ் டிரைவர் கொடுத்திருந்தார். சம்பவத்திற்கு பிறகு சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரித்தார்கள். அந்த சமயம் நாக்கில் காயம் ஏற்பட்டிருந்ததால் என்னால் விவரங்களை சொல்ல முடியவில்லை எழுதிக் கொடுத்தேன். தற்சமயம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்தப் புகார் என்னால் காவல் அதிகாரிகளிடம் விசாரணைக்காக மருத்துவமனைக்கு வந்த போது கொடுத்ததாகும். அது அ.சா.ஆ–1 .

5. சம்பவத்தைப் பற்றி நான் எழுதி காண்பித்ததை வைத்து போலீசார் புகாரை எழுதிக் கொண்டார்கள். சம்பவத்தன்று என்னிடமிருந்து போனை பிடுங்கி சென்ற நபர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். இன்று நீதிமன்றத்தில் இரண்டாம் பிரதிவாதி ஆஜராகவில்லை. மனுவின் மூலம் விளக்கு அளிக்கப்பட்டுள்ளார். கற்றறிந்த

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முதல் எதிரி வேறு ஒரு வழக்கில் சிறையில் இருப்பதாக தெரிவித்ததால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்
கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.